



நல்லவே எண்ணல் வேண்டும்..,

எண்ணிய முடிதல் வேண்டும்..,

# சக்கர வியூகம்

தினசரி நாளிதழ் “தேமதுரத் தமிழோசை உலகமெலாம்” DAILY NEWS PAPER

★SAKKRA VIYUGAM★

இணையத்தில் வாசிக்க..,

Website: www.sakkraviyugam.com PRGI:TNTAM/25/A1018 Email: sakkraviyugam@gmail.com

| VOLUME : 01 | ISSUE: 123 | 28.10.2025 | TUESDAY | IPPASI : 11 | PRICE : RS.5/- |
|---|---|---|---|---|---|
| மலர் : 01 | இதழ் : 123 | 28.10.2025 | செவ்வாய்கிழமை | ஐப்பசி : 11 | விலை : ரூ.5/– |


**3** மழைநீர் தேங்கும் இடங்களில் நீரை வெளியேற்ற 2,000க்கும் மேற்பட்ட மோட்டார் பம்புகள் தயார்: சென்னை மாநகராட்சி

**4** சூரசம்ஹாரத்தை முன்னிட்டு பழநி முருகன் கோயிலில் ‘தண்டு விரதம்’ இருந்து பக்தர்கள் வழிபாடு

**2** இந்தியா, ஆசியான் அமைப்பின் நூற்றாண்டு இது: உச்சி மாநாட்டில் காணொலியில் பங்கேற்ற பிரதமர் மோடி கருத்து

# அரசியல் கட்சி ‘ரோடு ஷோ’க்களுக்கு 10 நாட்களில் வழிகாட்டு நெறிமுறை: அரசுக்கு ஐகோர்ட் உத்தரவு

சென்னை: அக்.28-

அரசியல் கட்சித் தலைவர்களின் ரோடு ஷோ நிகழ்ச்சிகளுக்கு அனுமதி வழங்குவது தொடர்பான வழிகாட்டு நெறிமுறைகளை 10 நாட்களில் சமர்ப்பிக்க வேண்டும் என தமிழக அரசுக்கு சென்னை உயர் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

தவெக தலைவர் விஜய் பிரச்சாரத்துக்கு கடும் நிபந்தனைகள் விதிக்கப்படுவதால், பிரச்சாரத்துக்கு பாரபட்சமின்றி அனுமதி வழங்க உத்தரவிட வேண்டும் என தவெக சார்பில் சென்னை உயர் நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்யப்பட்டிருந்தது. இந்த வழக்கில் பொது சொத்துகள் சேதத்துக்கு இழப்பீடு வசூலிப்பது குறித்து விதிகள் வகுக்க தனி நீதிபதி உத்தரவு பிறப்பித்திருந்தார்.

இந்தச் சூழலில், செப்டம்பர் 27ம் தேதி கரூரில் விஜய் பிரச்சாரத்தின்போது, கூட்ட நெரிசல் ஏற்பட்டு, 41 பேர் பலியாகினர். இதையடுத்து, அரசியல் கட்சிகளின் ரோடு ஷோக்களுக்கு வழிகாட்டுதல் விதிமுறைக்ளை வகுக்கக் கோரி வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டிருந்தன.

இந்த அனைத்து வழக்குகளும், தலைமை நீதிபதி எம்.எம். ஸ்ரீவஸ்தவா மற்றும் நீதிபதி ஜி.அருள் முருகன் அமர்வில் இன்று விசாரணைக்கு வந்தன.

அப்போது தமிழக அரசுத்தரப்பில் ஆஜராகியிருந்த கூடுதல் தலைமை வழக்கறிஞர் ஜெ.ரவீந்திரன், வழிகாட்டு விதிகள் வகுக்கும் வரை எந்த கட்சிக்கும் ரோடு ஷோவுக்கு அனுமதி வழங்கப்பட மாட்டாது என உயர் நீதிமன்ற மதுரை அமர்வில் உத்தரவாதம் அளிக்கப்பட்டுள்ளது. விதிகள் வகுக்கும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. சம்பந்தப்பட்டவர்களிடம் கலந்தாலோசனை செய்து வருவதாக விளக்கமளித்தார்.



விதிகளை வகுக்கும் வரை எந்தக் கட்சிக்கும் அனுமதி வழங்கப்படாது என அரசு கூறுவது அரசியல் கட்சிகளின் அடிப்படை உரிமைகளை பறிப்பது ஆகாதா?. எந்த அடிப்படையில் உத்தரவாதம் அளிக்கப்பட்டது என தலைமை நீதிபதி கேள்வி எழுப்பினார்.

அதற்கு, எந்தக் கட்சியும் பொதுக்கூட்டம் நடத்துவதில் இருந்து தடுக்கப்படுவதில்லை என கூடுதல் தலைமை வழக்கறிஞர் தெரிவித்தார்.

தொடர்ந்து, தவெக தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட வழக்கில் தங்களையும் இணைக்க அனுமதிக்க வேண்டும் என பிரதான எதிர்க்கட்சியான அதிமுக தரப்பில் மூத்த வழக்கறிஞர் விஜய் நாராயண் கோரிக்கை விடுத்தார்.

தவெக தரப்பில் ஆஜரான மூத்த வழக்கறிஞர் ராகவாச்சாரி, பிரச்சாரத்துக்கு ஒரு நாள் முன் அனுமதி வழங்கப்பட்டது. முன் கூட்டியே அனுமதியளித்திருந்தால் இந்த அசம்பாவித சம்பவம் நடந்திருக்காது எனத் தெரிவித்தார். மேலும், கரூர் சம்பவத்தில் பாதிக்கப்பட்டவர்களை சந்திக்க அனுமதி கோரிய விண்ணப்பத்தையும் அரசு பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளவில்லை எனவும் குற்றம் சாட்டினார்.

எல்லா கட்சிகளுக்கும் முன்கூட்டியே அனுமதி வழங்க வேண்டும் எனத் தெரிவித்த தலைமை நீதிபதி, வழிகாட்டு விதிமுறைகள் வகுக்காவிட்டால் நீதிமன்றம் உத்தரவு பிறப்பிக்க நேரிடும் என எச்சரித்தார்.

காவல்துறை, மாநகராட்சி, தீயணைப்பு துறை, மருத்துவத் துறை உள்ளிட்டோர்களிடம் ஆலோசித்து தான் விதிமுறைகள் வகுக்க வேண்டும்.. உரிய கால அவகாசம் வழங்க வேண்டும் என தமிழக அரசுத் தரப்பில் கோரிக்கை விடுக்கப்பட்டது.

இதை ஏற்று, 10 நாட்களில் வழிகாட்டு விதிமுறைகளை சமர்ப்பிக்க தமிழக அரசுக்கு உத்தரவிட்ட நீதிபதிகள், வழக்குகளின் விசாரணையை நவம்பர் 11க்கு தள்ளிவைத்தனர்.

அதேசமயம், நெடுஞ்சாலைகள் தவிர பிற அனுமதிக்கப்பட்ட இடங்களில் கட்சிகளின் பொதுக் கூட்டங்களுக்கு அனுமதியளிக்க கோரிய விண்ணப்பங்களை பரிசீலிக்க இந்த வழக்கு தடையாக இருக்காது எனத் தெரிவித்த நீதிபதிகள், கூட்டங்களுக்கு அனுமதி கோரும் விண்ணப்பங்கள் மீது குறித்த காலத்தில் முடிவெடுக்க வேண்டும் எனவும் உத்தரவிட்டனர்.



## தமிழ் முழக்கம் பயிற்சி நிறைவு விழா

மதுரை, அக்.28-

தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் டிஜிட்டல் சேவைகள் துறை அமைச்சர் முனைவர் பழனிவேல் தியாகராஜன், மதுரை உலக தமிழ்ச்சங்கத்தில் தமிழ் முழக்கம் பயிற்சி நிறைவு விழாவில் பயிற்சி பெற்ற மாணவ மாணவியர்களுக்கு சான்றிதழ்களை வழங்கினார்.இந்நிகழ்ச்சியில் மாவட்ட ஆட்சித்தலைவர் ஜே.கே.பிரவீன்குமார், இ.ஆ.ப., தமிழ்வளர்ச்சி இயக்குநர் முனைவர் ஔவை அருள் அவர்கள், மதுரை உலகத்தமிழ்ச்சங்கம் இயக்குநர் முனைவர் இ.ச.பர்வீன் சுல்தானா, மற்றும் மாணவ,மாணவியர்கள் கலந்து கொண்டனர்.


## மாணவர் பத்திரிகையாளர் திட்டம்

பத்திரிகை துறையில் சாதிக்க வேண்டும் என்ற கல்லூரி மாணவ, மாணவியர்களுக்காக....

உங்களுக்கோர் அரிய வாய்ப்பு!

சமூகத்தில் அன்றாடம் நிகழும் கொடுமைகள், பெண்களுக்கெதிராக இழைக்கப்படும் அநீதிகள் மற்றும் சட்ட விதிமுறைகளுக்கு எதிராக அரங்கேறும் செயல்பாடுகள்,

தங்கள் பகுதிகளில் இது போல் நடக்கும் சட்டத்திற்கெதிரான சம்பவங்களையும், அடிப்படை உரிமைகள் கிடைக்கப்பெறாத அவல நிலைகளையும் ""சக்கர வியூகம்"" மாணவர் பத்திரிகையாளர் திட்டத்தில் இணைந்து எங்களுக்கு அனுப்புங்கள்

உண்மை தன்மையறிந்து பிரசுரிக்கப்படும்

எனவே, பத்திரிகை துறையில் சாதிக்க வேண்டும் என்ற கனவிலுள்ள மாணவ, மாணவியர் கீழ்க்கண்ட விண்ணப்பத்தினை பூர்த்தி செய்து சக்கர வியூகம் பத்திரிகை முகவரிக்கு அனுப்பி வைக்கவும்.

விண்ணப்ப படிவத்திற்கு ஸ்கேன் செய்யவும்.



FOUNDER / EDITOR
SAKKRA VIYUGAM INVESTIGATE DAILY
HO: #70/53 A1, THILAGAR NAGAR 1ST ST,
ANUPPARPALAYAM, TIRUPPUR-641652
WWW.SAKKRAVIYUGAM.COM
88705 00000


## சின்னாளபட்டியில் வசிக்கும் தூய்மை பணியாளர்களுக்கு விரைவில் வீடுகள் கட்டிக்கொடுக்கப்படும் : அமைச்சர் பெரியசாமி உறுதி

சின்னாளபட்டி, அக்.28

சின்னாளபட்டியில் வசிக்கும் தூய்மை பணியாளர்களுக்கு விரைவில் வீடுகள் கட்டிக்கொடுக்கப்படும் என அருந்ததியர் சமுதாய நிர்வாகிகளிடம் அமைச்சர் ஐ.பெரியசாமி உறுதி அளித்ததுடன் சின்னாளபட்டி பேரூராட்சியில் பணிபுரியும் தூய்மை பணியாளர்களில் அருந்ததியர் சமுதாயத்தை சேர்ந்த தகுதி உள்ளவர்களுக்கு பதவி உயர்வு வழங்க நடவடிக்கை எடுக்கப்படும் என அமைச்சர் ஐ.பெரியசாமி உறுதியளித்தார்.



திண்டுக்கல் மாவட்டம் ஆத்தூர் சட்டமன்ற தொகுதி திமுக உறுப்பினரும், திமுக மாநில துணை பொதுச்செயலாளரும், ஊரக வளர்ச்சித்துறை அமைச்சருமான ஐ.பெரியசாமி அவர்களிடம் ஆத்தூர் தொகுதியைச் சேர்ந்த பொது மக்கள் மற்றும் கோரிக்கை மனுக்கை பெற்று உடனடியாக சம்மந்தப்பட்ட அதிகாரிகளை தொடர்பு கொண்டு பொதுமக்களின் கோரிக்கைகளை நிறைவேற்ற உத்தரவிட்டார். கீழக்கோட்டை அருந்ததியர் நகரைச் சேர்ந்த நாட்டாண்மை அழகர், செயலாளர் பேப்பர் அழகர், அன்னாவி பல்லு முருகேசன், கோல்காரர் ராஜா, நிர்வாகிகள் சுந்தர்ராஜன், நாகரத்தினம், அழகர்சாமி, ஜாதி தலைவர் பெருமாள், ஆகியோர் தங்கள் சமுதாய மக்களுக்கு வீடுகள் வழங்க வேண்டுமென அமைச்சர் ஐ.பெரியசாமி அவர்களிடம் கோரிக்கை மனு கொடுத்ததுடன் தங்கள் சமுதாயத்தை சேர்ந்த தூய்மை பணியாளர்கள் பதவி உயர்வு பெறாமல் சின்னாளபட்டி பேரூராட்சியில் பணிபுரிகின்றனர். அவர்களுக்கு துப்புரவு மேற்பார்வையாளர் பணிக்கு பதவி உயர்வு வந்திருந்தும் அதை செயல்படுத்தவில்லை என புகார் செய்தனர். அவர்களிடம் பேசிய அமைச்சர் ஐ.பெரியசாமி அவர்கள் சென்னையிலிருந்து திரும்பியவுடன் இதுகுறித்து பேசி தகுதியுள்ள நபர்களுக்கு துப்புரவு மேற்பார்வையாளர் பணி வழங்க நடவடிக்கை எடுக்கப்படும் என்றதுடன் நான் ஒருவருக்கு உறுதியளித்துவிட்டால் அதை நிறைவேற்றாமல் இருக்கமாட்டேன். உங்களுக்கு சொன்னபடி அருந்ததியர் சமுதாய மக்கள் வசிக்கும் பகுதியில் புதிய அடுக்குமாடி வீடுகள் கட்டிக்கொடுக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்றார். நிகழ்ச்சியின் போது திண்டுக்கல் கிழக்கு மாவட்ட பொருளாளர் கு.சத்தியமூர்த்தி, தலைமை செயற்குழு உறுப்பினர் ஆத்தூர் நடராஜன், அமைச்சரின் உதவியாளர் வத்தலகுண்டு ஹரிஹரன், கிழக்கு மாவட்ட திமுக துணைச்செயலாளர் ஆ.நாகராஜன், சட்டமன்ற உறுப்பினர் முகாம் அலுவலர் வடிவேல் முருகன், பொதுக்குழு உறுப்பினர் அக்பர் மாவட்ட விவசாய அணி அமைப்பாளர் இல.கண்ணன், இலக்கிய அணி அமைப்பாளர் முருகானந்தம், பேரூராட்சி மன்ற தலைவர்கள் அய்யம்பாளையம் ரேகா அய்யப்பன், சித்தயன்கோட்டை போதும்பொன்னு முரளி, மாவட்ட தகவல் தொழில்நுட்ப அணி துணை ஒருங்கிணைப்பாளர் பாறைப்பட்டி வாஞ்சிநாதன், மாவட்ட விளையாட்டு மேம்பாட்டு அணி துணை அமைப்பாளர் பண்ணைப்பட்டி அருண்ஜெகநாதன், மாவட்ட வர்த்தகர் அணி அமைப்பாளர் பொன்முருகன், முன்னால் ஒன்றிய குழு உறுப்பினர்கள் செல்வி காங்யேகன், சுமதி கணேசன், நாகலட்சுமி ரமேஷ், காளீஸ்வரி மலைச்சாமி, மாவட்ட தொண்டரணி துணை அமைப்பாளர்கள் கும்மம்பட்டி விவேகானந்தன், பஞ்சம்பட்டி மணி, திண்டுக்கல் மாமன்ற உறுப்பினர் நெல்லை சுபாஸ், 7வது வார்டு திமுக நிர்வாகிகள் நரசிங்கம், வீரபாண்டி உட்பட திமுக நிர்வாகிகள் பலர் உடன் இருந்தனர்.

## மருதுபாண்டியர் நினைவு நாளை முன்னிட்டு பாரதிய ஜனதா கட்சி நகர சார்பாக திருவுருவ சிலைக்கு மாலை அணிவித்தனர்

தேனி. அக்.28-


தேனி மாவட்டம் சின்னமனூர் பகுதியில் மருதுபாண்டியர் நினைவு நாளை முன்னிட்டு பாரதிய ஜனதா கட்சி நகர தலைவர் சிங்கம் தலைமையில் அவரது திருவுருவ சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தப்பட்டது இந்நிகழ்வில் விவசாய அணி மாவட்ட பொதுச் செயலாளர் லோகேந்திரராஜன் .கட்சி மாவட்ட பொதுச் செயலாளர் வினோத்குமார் நகர பொதுச்செயலாளர் சசிகுமார் நகர பொருளாளர் நாகராஜன் மற்றும் முக்கிய நிர்வாகிகள் உடன் இருந்தனர்.







■ திண்டுக்கல் மாவட்டம் பழனியில் பாரதிய ஜனதா கட்சியின் சார்பில் நடைபெற்ற பழனி சட்டமன்ற தொகுதிக்கு உட்பட்ட பூத் நிர்வாகிகள் மாநாட்டில் 3500க்கும் மேற்பட்ட நிர்வாகிகள் மற்றும் சிறப்பு விருந்தினர்கள் கலந்து கொண்டனர். மாநாடு மிகவும் சிறப்பாக வெற்றிபெற்றதாக அக்கட்சியின் நிர்வாகிகள் தெரிவிக்கின்றனர். மேலும் வரும் சட்ட மன்ற தேர்தலில் பழனி தொகுதியில் தாமரை வெற்றிபெற அனைத்து தாமரை சொந்தங்களும் அயராது உழைக்க வேண்டும் என்றும் கழக தொண்டர்களுக்கு அக்கட்சியின் நிர்வாகிகள் வேண்டுகோள் விடுத்துள்ளனர். நிருவாக ஆசிரியர் காந்தி




# இந்தியா, ஆசியான் அமைப்பின் நூற்றாண்டு இது: உச்சி மாநாட்டில் காணொலியில் பங்கேற்ற பிரதமர் மோடி கருத்து

புதுடெல்லி, அக்.28-
21ம் நூற்றாண்டு இந்தியா, ஆசியான் அமைப்பின் நூற்றாண்டு ஆகும் என்று பிரதமர் நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

ஆசியான் அமைப்பில் மலேசியா, இந்தோனேசியா, சிங்கப்பூர் உள்ளிட்ட 10 நாடுகள் உறுப்பினர்களாக உள்ளன. இந்த அமைப்பின் 3 நாள் உச்சி மாநாடு மலேசிய தலைநகர் கோலாலம்பூரில் நேற்று தொடங்கியது. இதன் ஒரு பகுதியாக ஆசியான் இந்தியா உச்சி மாநாடு நேற்று நடைபெற்றது. இதில் பிரதமர் நரேந்திர மோடி காணொலி வாயிலாக பேசியதாவது: உலக மக்கள் தொகையில் நான்கில் ஒரு பகுதி மக்கள் இந்தியா, ஆசியான் நாடுகளில் வசிக்கின்றனர். இந்தியா, ஆசியான் நாடுகள் இடையே ஆழமான நட்புறவு நீடிக்கிறது. கலாச்சார ரீதியாக நாம் ஒரே பாதையில் பயணம் செய்கிறோம்.

இந்தியாவின் கிழக்கத்திய கொள்கையின்படி ஆசியான் நாடுகளுக்கு முன்னுரிமை அளிக்கப்பட்டு வருகிறது. இந்த கூட்டமைப்பின் ஒத்துழைப்பால் இந்திய, பசிபிக் பெருங்கடல் பகுதியில் சுதந்திரமான கடல் போக்குவரத்தை உறுதி செய்ய முடியும். குளோபல் சவுத் கூட்டமைப்பில் இந்தியாவும் ஆசியான் நாடுகளும் உறுப்பினர்களாக உள்ளன. வணிகரீதியாக மட்டுமன்றி கலாச்சாரரீதியாகவும் நாம் இணைந்திருக்கிறோம்.

உணவு பாதுகாப்பை உறுதி செய்வதிலும் பருவநிலை மாறுபாட்டை தடுப்பதிலும் இந்தியா, ஆசியான் அமைப்பு ஒன்றிணைந்து செயல்பட்டு வருகின்றன. பேரிடர் காலங்களிலும் இரு தரப்பும் பரஸ்பரம் உதவி செய்து வருகின்றன. கல்வி, சுற்றுலா, அறிவியல், தொழில்நுட்பம், சுகாதாரம், பசுமை எரிசக்தி, சைபர் பாதுகாப்பு ஆகிய துறைகளிலும் இணைந்து செயல்படுகின்றன.

21ம் நூற்றாண்டு இந்தியா, ஆசியான் அமைப்பின் நூற்றாண்டு ஆகும். வரும் 2045ம் ஆண்டுக்கான ஆசியான் அமைப்பின் தொலைநோக்கு திட்டங்கள் நிச்சயமாக நிறைவேறும். இதேபோல வரும் 2047ம் ஆண்டில் வளர்ச்சி அடைந்த இந்தியாவும் உருவாகும். நாம் தோளோடு தோள் நின்று வெற்றிப் பயணத்தை தொடர்வோம்.

இவ்வாறு அவர் பேசினார்.

ஆசியான் உச்சி மாநாடு மற்றும் ஆசியான் இந்தியா உச்சி மாநாட்டில் பிரதமர் நரேந்திர மோடி ஆண்டுதோறும் பங்கேற்பது வழக்கம். ஆனால் முதல்முறையாக அவர் மாநாட்டில் பங்கேற்கவில்லை.

கோலாலம்பூரில் நேற்று தொடங்கிய உச்சி மாநாட்டில் அமெரிக்க அதிபர் டொனால்டு ட்ரம்ப் பங்கேற்றார். வரிவிதிப்பு விவகாரம் தொடர்பாக இந்தியா, அமெரிக்கா இடையே பேச்சுவார்த்தை நடைபெற்று வருகிறது. இதில் சுமுக உடன்பாடு எட்டப்பட்ட பிறகு அதிபர் ட்ரம்பை பிரதமர் மோடி சந்திக்க முடிவு செய்யப்பட்டு இருக்கிறது. இதன்காரணமாகவே பிரதமர் மோடியின் மலேசிய பயணம் ரத்து செய்யப்பட்டது என்று டெல்லி வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

# கசவனம்பட்டி மௌன ஜோதி நிர்வாண சுவாமிகள் 43வது ஆண்டு குருபூஜை விழா - திண்டுக்கல் கிழக்கு மாவட்ட திமுக செயலாளர் ஐ.பி.செந்தில்குமார் பங்கேற்பு

## கெயின்அப் நிறுவன நிர்வாக இயக்குநர் இந்திரா துவாரகநாதன், மெர்சி செந்தில்குமாருக்கு கோவில் கமிட்டி சார்பாக உற்சாக வரவேற்பு அளிக்கப்பட்டது

சின்னாளபட்டி, அக்28
கசவனம்பட்டியில் நடைபெற்ற மௌன ஜோதி நிர்வாண சுவாமிகள் 43வது ஆண்டு குருபூஜை விழாவில் திண்டுக்கல் கிழக்கு மாவட்ட திமுக செயலாளர் ஐ.பி.செந்தில்குமார் சிறப்பு அழைப்பாளராக கலந்துகொண்டார். கெயின்அப் நிறுவன நிர்வாக இயக்குநர் இந்திரா துவாரகநாதன், மெர்சி செந்தில்குமாருக்கு கோவில் கமிட்டி சார்பாக உற்சாக வரவேற்பு அளிக்கப்பட்டது.



திண்டுக்கல் மாவட்டம் ரெட்டியார்சத்திரம் ஒன்றியம் கசவனம்பட்டியில் தங்கி அருள்வாக்கு கூறி வந்தவர் ஸ்ரீகசவன மௌனஜோதி நிர்வாண சுவாமிகள். திண்டுக்கல் மாவட்ட மக்களால் துருவ நட்சத்திரம், மகான்களுக்கெல்லாம் மகான் என்று அழைக்கப்பட்ட ஸ்ரீஜோதி மௌன நிர்வாண சாமிகளின் 43வது குரு பூஜை விழாவை முன்னிட்டு கசவனம்பட்டியில் அக்டோபர் 25,26 ஆகிய தேதிகளில் நடைபெற்றது. அக்டோபர் 25ம் தேதி சனிக்கிழமை திருமலைக்கேணி, திருமூர்த்தி மலை, காசி, ராமேஸ்வரம், சதுரகிரி உட்பட அனைத்து புனித தீர்த்தங்களிலிருந்தும் தீர்;த்தம் கொண்டுவரப்பட்டு திண்டுக்கல்லில் இருந்து பாதையாத்திரையாக கசவனம்பட்டியில் உள்ள அருள்மிகு ஸ்ரீஜோதி மௌன நிர்வாண சுவாமிகள் ஆலயத்திற்கு கொண்டு வரப்பட்டு தீர்த்தாபிஷேகம் நடைபெற்றது. அதன்பின்னர் ஞாயிற்றுக்;கிழமை காலை 5 மணியளவில் மகாயாகம் நடைபெற்றது. மூலநட்சத்திரத்தை முன்னிட்டு சுவாமிக்கு 1008படி பாலாபிஷேகம் நடைபெற்றது. அதன் தொடர்ச்சியாக சுவாமிக்கு 18 வகை அபிஷேகம் செய்யப்பட்டு மலர் மற்றும் ரூபாய் நோட்டுக்களால் ஆன மாலை அணிவித்து அலங்காரம் செய்யப்பட்டிருந்தது. கோவில் வளாகம் முழவதும் பல வகையான பழங்கள் மற்றும் பூக்களைக் கொண்டு பந்தல் அமைத்திருந்தனர் உற்சவர் மற்றும் மூலவருக்கு தங்க கிரீடம் சாற்றும் நிகழ்ச்சி நடைபெற்றது. கோவில் வளாகம் முழுவதும் மலர்களை கொண்டு சுவாமிக்கு மலர்களை கொண்டு அலங்காரம் செய்திருந்தனர். 11மணியளவில் சிறப்பு அழைப்பாளர்கள் அன்னதான கொடியை ஏற்ற அதன் தொடர்ச்சியாக மாபெரும் அன்னதானம் நடைபெற்றது. நூற்றுகணக்கானோர் அன்னதானத்தில் கலந்துகொண்டு சிறப்பித்தனர். கோவில் திருவிழாவை முன்னிட்டு தமிழகத்தில் உள்ள அனைத்து பகுதியில் இருந்தும் பக்தர்கள், மற்றும் சாதுக்கள் கோவிலில் வளாகத்தில் குவிந்த வண்ணம் இருந்தனர். விழாவில் சிறப்பு அழைப்பாளராக திண்டுக்கல் கிழக்கு மாவட்ட திமுக செயலாளரும், பழனி சட்டமன்ற உறுப்பினருமான ஐ.பி.செந்தில்குமார், கெயின்அப் நிறுவன நிர்வாக இயக்குநர் இந்திரா துவாரகநாதன், ஆதவன் அறக்கட்டளை மற்றும் மெர்சி பவுன்டேசன் நிறுவனர் மெர்சி செந்தில்குமார், ஓய்வு பெற்ற தமிழக அரசு துணைச்செயலாளர் கே.பேச்சியம்மாள், எஸ்.கே. சீஸ்.குப்புசாமி செட்டியார், செல்லமுத்தையா, உட்பட பலர் கலந்துகொண்டனர். விழாவிற்கான ஏற்பாடுகளை ஸ்ரீஜோதி மௌன நிர்வாண சுவாமிகள் டிரஸ்ட் மற்றும் பக்தர்கள் மற்றும் ஊர் பொதுமக்கள் சிறப்பாக செய்திருந்தனர். அதிகாலை முதல் கோவிலில் கூட்டம் அலைமோதியது.



# பாரதிய ஜனதா கட்சி திருப்பூர் தெற்கு மாவட்ட நிர்வாகிகள் அறிமுக கூட்டம்

உடுமலை அக்.28-
திருப்பூர் தெற்கு மாவட்டத்திற்கு உட்பட்ட காங்கேயத்தில் பாரதிய ஜனதா கட்சி திருப்பூர் தெற்கு மாவட்ட நிர்வாகிகள் அறிமுக கூட்டம் நடந்தது.

கூட்டத்திற்கு மாவட்ட தலைவர் மோகனப்பிரியா சரவணன் தலைமையில் சிறப்பு அழைப்பாளர் மாநில அமைப்பு செயலாளர் கேசவ விநாயகம் மாநில செய்தி தொடர்பாளர்கள் முன்னாள் எம்பி கார்வேந்தன் செயற்குழு உறுப்பினர்கள் ருத்ரகுமார் கோவை பெருங்கோட்ட அமைப்பு செயலாளர் பாலகுமார் மாவட்ட பொருளாளர் கிருஷ்ணன் மாவட்ட பொதுச்செயலாளர் சுகுமார் மாநில செயற்குழு உறுப்பினர் விஜயராகவன் ஜோதிஸ்வரி கந்தசாமி மாநில பொதுக்குழு உறுப்பினர்கள் கலந்து கொண்டனர் .

மாவட்ட மகளிர் அணி தலைவர் பரிமளா சுப்பிரமணி தெற்கு மண்டல பாஜக தலைவர் தலைவர் துர்கா ஈஸ்வர சாமி நகர மண்டல தலைவர் பாலகுரு , சார்பு அணி பொறுப்பாளர்கள்,செயலாளர் கொங்கு ரமேஷ் விசாகன் வெள்ளகோவில் ஜெகநாதன் கோபாலகிருஷ்ணன் ,செல்வி முருகேஷ் ,மற்றும் பாஜக தெற்கு மாவட்ட புதிய நிர்வாகிகள் கலந்து கொண்டனர்

# குன்னூர் சிம்ஸ் பூங்காவில் பூத்துக் குலுங்கும் மலர்கள்

குன்னூர், அக்.28–
நீலகிரி மாவட்டம், குன்னூரில் மிகவும் பிரசித்தி பெற்ற சுற்றுலா தலம் சிம்ஸ் பூங்கா. இந்த பூங்காவுக்கு நாள்தோறும் ஆயிரக்கணக்கான சுற்றுலா பயணிகள் வந்து செல்கின்றனர். இவர்களை கவரும் வகையில், பல்வேறு மலர் நாற்றுகள் நடவு செய்யப்பட்டு பராமரிக்கப்பட்டு வருகின்றன. இந்நிலையில் இந்த ஆண்டு இரண்டாம் சீசனான அக்டோபர், நவம்பர் மாதத்துக்காக நடவு செய்யப்பட்டிருந்த 1.90 லட்சம் மலர் நாற்றுக்கள் மழையின் காரணமாக தற்போது பூத்துக் குலுங்குகின்றன. அமெரிக்கா, ஜப்பான், பிரான்ஸ் உட்பட பல்வேறு நாடுகளை தாயகமாக கொண்ட பால்சம், சால்வியா, பிளாகஸ், காஸ்மாஸ், ஜின்னியா, பெகோனியா, பேன்சி, டெல்பினியம் போன்ற போன்ற மலர்கள் பூத்து சுற்றுலா பயணிகள் கண்ணுக்கு விருந்தாக காட்சி அளிக்கின்றன. பூக்களின் முன்பு நின்று சுற்றுலா பயணிகள் புகைப்படம் மற்றும் செல்பி எடுத்துச் செல்கின்றனர். மேலும், சுற்றுலாப் பயணிகளின் வருகை அதிகரிப்பால் சிம்ஸ் பூங்கா களைகட்டி உள்ளது.

# பொள்ளாச்சி மார்க்கெட்டுக்கு வாழைத்தார் வரத்து அதிகம்

பொள்ளாச்சி, அக்.28-
பொள்ளாச்சி காந்தி தினசரி மார்க்கெட்டின் ஒரு பகுதியில், வாரத்தில் ஞாயிறு மற்றும் புதன்கிழமைகளில் வாழைத்தார் கிலோ கணக்கில் விற்பனை செய்யப்படுகிறது.

சுற்றுவட்டார கிராமங்களில் இருந்து மட்டுமின்றி, வெளி மாவட்டங்களில் இருந்தும் வாழைத்தார்கள் விற்பனைக்காக கொண்டு வரப்படுகிறது.

கடந்த 2 வாரமாக அவ்வப்போது மழையால், சுற்றுவட்டார பகுதியில் இருந்து மட்டுமின்றி வெளியூர்களில் இருந்தும் வாழைத்தார்களின் வரத்து சற்று குறைவானது. இருப்பினும் சுப முகூர்த்தம் உள்ளிட்ட விசேஷ நாட்கள் இல்லாததால், அனைத்து ரக வாழைத்தார்களும் குறைவான விலைக்கே விற்பனையானது.

இந்நிலையில், இந்த வாரத்தில் நேற்று நடந்த சந்தை நாளின்போது, பொள்ளாச்சி மற்றும் சேத்துமடை, ஆனைமலை, ஒடையக்குளம் சுற்றுவட்டார கிராமங்களில் இருந்தும் தூத்துக்குடி, கரூர், திருச்சி உள்ளிட்ட வெளியூர்களில் இருந்தும் வாழைத்தார் வரத்து அதிகமாக இருந்தது. வரத்து அதிகமாக இருந்தாலும், அனைத்து ரக வாழைத்தார்களும், இன்று (27ம் தேதி) மற்றும் வரும் 31ம் தேதி என இந்த வாரத்தில் அடுத்தடுத்து முகூர்த்த நாட்களாக இருப்பதால், கூடுதல் விலை நிர்ணயித்து விலை போனது.

செவ்வாழை தார் ஒன்று (கிலோ கணக்கில்) ரூ.65 வரையிலும், சாம்ராணி ரூ.42க்கும், பூவந்தார் ரூ.38க்கும், மோரீஸ் ரூ.38 க்கும், ரஸ்தாளி ரூ.45க்கும், நேந்திரன் 1 கிலோ ரூ.42க்கும், கேரள ரஸ்தாளி ஒரு கிலோ ரூ.500க்கு என கூடுதல் விலைக்கு ஏலம் போனது என்று வியாபாரிகள் தெரிவித்தனர்.



# சத்தீஸ்கரில் பழங்குடியின சிறுவர்களிடம் செல்போனில் கார்ட்டூன்களை காட்டிய சிஆர்பிஎப் வீரர்: சமூக வலைதளங்களில் வீடியோ வைரல்

ராய்ப்பூர், அக்.28-
சத்தீஸ்கர் வனப்பகுதியில் வசிக்கும் பழங்குடியின சிறுவர்களிடம், சிஆர்பிஎப் வீரர் ஒருவர் தனது செல்போனில் கார்ட்டூன்களை காட்டிய வீடியோ வைரலாக பரவி வருகிறது.

நக்சல்கள் ஆதிக்கம் நிறைந்த மாநிலங்களில் ஒன்று சத்தீஸ்கர். வரும் 2026ம் ஆண்டு மார்ச் மாதத்துக்குள் நக்சல்களை முற்றிலும் ஒழிக்க மத்திய அரசு திட்டமிட்டுள்ளது. இது தொடர்பாக பல்வேறு திட்டங்களை சம்பந்தப்பட்ட மாநில அரசுகளுடன் இணைந்து செயல்படுத்தி வருகிறது. குறிப்பாக சரணடையும் நக்சல்கள் கண்ணியமான வாழ்க்கையைத் தொடங்குவதற்கான உதவிகள் வழங்கப்படுகின்றன.

இந்த சூழ்நிலையில், அம்மாநிலத்தில் ஒரு வீடியோ சமூக வலைதளங்களில் வேகமாக பகிரப்பட்டு வருகிறது. அதில், சிஆர்பிஎப் வீரர் ஒருவர் தனது செல்போனில் கார்ட்டூன்களை காட்டுகிறார். அதைப் பார்த்த சிறுவர்கள் புன்னகைக்கின்றனர். இந்த வீடியோ காட்சி பார்ப்பவர்களின் இதயத்தைத் தொடுவதாக அமைந்துள்ளது. அத்துடன் சிறுவர்களுக்கு கல்வி எவ்வளவு முக்கியம் என்பதை உணர்த்துவதாகவும் உள்ளது.

இந்த வீடியோவைப் பகிர்ந்த ஒருவர், “வீடியோவைப் பாருங்கள். அடர்ந்த வனப்பகுதியில் வசிக்கும் அந்தக் குழந்தைகள் முதல் முறையாக காட்டுனைப் பார்க்கின்றனர். நக்சல்களின் ஆதிக்கம் காரணமாக, இவர்கள் குழந்தைப்பருவ அனுபவத்தையும் கல்வியையும் தவறவிட்டிருப்பது என்னை வருத்தத்தில் ஆழ்த்தி உள்ளது. இப்போது அவர்களுக்கு தேவையான அனைத்து வசதிகளும் கிடைக்கும் என நம்புகிறேன்’’ என கூறியுள்ளார்.

# தேனி அல்லிநகரத்தில் அரசு சார்பில் கட்டப்பட்ட வீடுகளை உரிய பட்டியலின மக்களிடம் இலவசமாக ஒப்படைக்க வேண்டும் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் மாநிலச் செயலாளர் பெ.சண்முகம் வேண்டுகோள்

தேனி, ஆக்.28-
தேனி மாவட்டம் அல்லிநகரம் நகராட்சிக் குட்பட்ட பொட்டல்களத்தில் கடந்த 2001 ஆம் ஆண்டு திமுக ஆட்சியில், அப்போதைய முதல்வர் கருணாநிதியால் பட்டியலின மக்கள் 500 பேருக்கு 2 செண்டு வீதம் பட்டா வழங்கப்பட்டது.



வீடு கட்ட வசதி இல்லாத நிலையில் பட்டா பெற்ற மக்கள் குடிசை போட்டு குடியிருந்து வந்தனர். பின்னர் அந்த இடத்தை நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரியம் பட்டாதாரர் அனுமதியின்றி. வீடுகளை கட்டி முடித்தது என சம்பந்தப்பட்ட பட்டா பெற்ற நபர்கள் அணுகிய போது பட்டா ரத்து செய்யப்பட்டுள்ளதாக அதிகாரிகள் தெரிவித்தனர்

பாதிக்கப்பட்டவர்கள் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி அலுவலகத்திற்குச் சென்று இதுகுறித்து புகார் அளித்தனர். அதன்பேரில் கட்சியின் மத்தியக் குழு உறுப்பினர் கே.பாலபாரதி சம்பந்தப்பட்ட இடத்திற்குச் சென்று பார்வையிட்டு. அன்று தேனி வந்திருந்த உள்ளாட்சித் துறை அமைச்சர் ஐ.பெரியசாமியை நேரில் சந்தித்து, உரியவர்களுக்கு வீடு வழங்க வலியுறுத்தினார்.

அதனைத் தொடர்ந்து அமைச்சர் ஐ.பெரியசாமி அந்த இடத்திற்கு நேரில் சென்று பட்டா பெற்ற நபர்களை சந்தித்து, கலைஞர் கையால் பட்டா வழங்கப்பட்ட இடத்தை அவர்களுக்கு வழங்கி வீடுகளை ஒதுக்க வேண்டும் என அதிகாரிகளை கேட்டுக் கொண்டார்.

இந்நிலையில் கட்டப்பட்ட வீடு களுக்கு ஒன்றிய, மாநில அரசுகள் மானி யம் போக ஒரு, வீட்டிற்கு ரூ.3.4 லட்சம் பணம் செலுத்த வேண்டும் என நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரிய அதிகாரிகள் தெரிவித்தனர்.

தொடர் காத்திருப்பு போராட்டம் அரசு சார்பில் பட்டா வழங்கப்பட்ட இடத்தில், கட்டப்பட்ட வீடுகளை உரிய பட்டியலின மக்களுக்கு இலவசமாக வழங்க வேண்டும் என வலியுறுத்தி மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் மத்தியக் குழு உறுப்பினர் கே.பாலபாரதி தலைமையில் தொடர் போராட்டம் நடைபெற்று,பெ.சண்முகம் ஆய்வு இந்நிலையில் கட்சியின் மாநிலச் செயலாளர் பெ.சண்முகம் பொட்டல்களத்தில் உள்ள வீடுகளை நேரில் பார்வையிட்டார்

ஆய்வின் போது கட்சியின் மாவட்டச் செயலாளர் இராமச்சந்திரன், மாவட்ட செயற்குழு உறுப்பினர்கள் வெங்கடேசன், வெண்மணி, ஆறுமுகம், லெனின்,முருகன், மாவட்டக் குழு உறுப்பினர், மாதர் சங்க மாவட்ட செயலாளர் சத்யா,உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.....



■ தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம் கும்பகோணம்( லிட்) திருச்சி மண்டல அலுவலகத்தில் நேற்று லஞ்ச ஒழிப்பு நாள் உறுதிமொழி திருச்சி மண்டல பொது மேலாளர் டி. சதீஷ்குமார் தலைமையில் அனைத்து போக்குவரத்து கழக பணியாளர்கள் உறுதிமொழி எடுத்துக் கொண்ட காட்சி.



## மத்திய மாநில அரசுகளை வலியுறுத்தி டெல்லியில் அடுத்த மாதம் சாகும் வரை உண்ணாவிரத போராட்டம்: திருச்சி கூட்டத்தில் விவசாயிகள் அறிவிப்பு

திருச்சி, அக்.28-

திருச்சி மாநகர தேசிய தென்னிந்திய நதிகள் இணைப்பு விவசாயிகள் சங்க நிர்வாகிகள் கூட்டம் நேற்று அண்ணாமலை நகரில் நடந்தது. மாவட்ட தலைவர் உமா காந்த் தலைமை தாங்கினார்.

மாநில துணைத் தலைவர் மேகராஜன், மாநில நிர்வாகிகள் பரமசிவம், ஆண்டவர், செந்தில், மதி, ராஜ சுலோச்சனா, நீலாவதி ஆகியோர் முன்னிலை வகித்தனர். இதில் மாநில தலைவர் பி.அய்யா கண்ணு

சிறப்பு அழைப்பாளராக கலந்து கொண்டு பேசினார்.

பின்னர் நடைபெற்ற கூட்டத்தில் மழைக்காலங்களில் 25 சதவீத ஈரப்பதம் உள்ள நெல்லையும், மத்திய அரசு நேரடி நெல் கொள்முதல் நிலையம் மூலமாக கொள்முதல் செய்வதுடன், பிரதமர் மோடி கூறியது போல ஒரு கிலோ நெல்லுக்கு ரூ.54 தரவேண்டும் என்று மத்திய அரசை கேட்டு அடுத்த மாதம் (நவம்பர்) டெல்லியில் சாகும் வரை உண்ணாவிரதம் இருப்பது,

அரசின் நேரடி நெல் கொள்முதல் நிலையங்களில்

நெல் மூட்டைகளுக்கு லஞ்சம் கேட்பதை தமிழக முதலமைச்சர் தடுத்து நிறுத்த வேண்டும் காவிரி ஆற்றில் ஆயிரக்கணக்கான கன அடி வெள்ள நீர் வீணாக கடலில் சென்று கலக்கிறது அதில் 2000 கன அடி நீரை காவிரி அய்யாறு இணைப்பு கால்வாய் மேட்டூரில் இருந்து வெட்டி திருப்பி விட்டால் சேலம், நாமக்கல், திருச்சி, பெரம்பலூர் ,அரியலூர் மாவட்டங்களில் 5 லட்சம் புஞ்சை நிலங்கள் நஞ்சை நிலமாகும். மேலும் ஆயிரக்கணக்கான ஏரி குளங்கள் நிரம்பி ஆயிரம் அடிக்கு கீழ் உள்ள நிலத்தடி நீர்மட்டம் 20 அடிக்கு வர வாய்ப்புள்ளது இதற்கு மத்திய மாநில அரசுகள் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

**15 ஆண்டு காலமாக உங்கள் பின்னால் அணிவகுத்தோம் எங்களை மறந்து விட்டாயே விஜய் அண்ணா**

## கட்சி மாநாட்டிலும் பொது கூட்டத்திலும் கூட எங்களுக்கு இரங்கல் தெரிவிக்கவில்லையே விஜய் அண்ணா

### அஞ்சலி போஸ்டர் அடித்து ஆதங்கத்தை வெளிப்படுத்திய த.வெ.க முதல் மாநாட்டில் உயிரிழந்த விஜய் ரசிகர்களின் குடும்பத்தினர்

திருச்சி, அக்.28-

நடிகர் விஜய்யின் தமிழக வெற்றிக்கழகத்தின் முதல் மாநாட்டில் கலந்து கொள்வதற்காக கடந்த ஆண்டு திருச்சி மாவட்டத்திலிருந்து சென்ற வழக்கறிஞர் வி.எல். சீனிவாசன் மற்றும் உறையூர் கலை ஆகிய இருவர் விபத்தில் உயிரிழந்தனர். அவர்களின் முதலாம் ஆண்டு நினைவு அஞ்சலி போஸ்டர் திருச்சியில் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

அதில் நடிகர் விஜய்க்கு பல கேள்விகளை கேட்டு அவர்கள் போஸ்டர் ஒட்டியுள்ளனர்

வீர தேவேந்திர மக்கள் முன்னேற்ற அறக்கட்டளை சார்பில் ஒட்டப்பட்டுள்ள அந்த போஸ்டரில் .... தமிழக வெற்றிக்கழகத்தின் முதல் மாநாட்டில் உயர்நீத்தோம் எங்களை மறந்து விட்டாயே விஜய் அண்ணா !




15 ஆண்டு காலமாக உங்கள் பின்னால் அணிவகுத்தோம் எங்களை மறந்து விட்டாயே விஜய் அண்ணா !

கட்சி மாநாட்டிலும், பொது கூட்டத்திலும் கூட எங்களுக்கு இரங்கல் தெரிவிக்கவில்லையே விஜய் அண்ணா!

முதல் சுற்றுப்பயணம் திருச்சி மாவட்டத்திற்கு வருகை தந்தாயே விஜய் அண்ணா! அப்போது எங்களுடைய உழைப்பில் முதல் வெற்றியைப் பெற்றீர்களே அப்போது கூட எங்களை மறந்து விட்டாயே விஜய் அண்ணா!

கரூர் துயர சம்பவத்திற்கு ஒவ்வொரு குடும்பத்திற்கும் தத்துப் பிள்ளையாக இருப்பேன் என்று உறுதி அளித்து உள்ளீர்களே விஜய் அண்ணா !

எங்கள் குடும்பம் எல்லாம் நடுரோட்டில் கிடப்பதா விஜய் அண்ணா !

நீங்கள் மறந்தாலும் மேலும் மேலும் நீங்கள் உயர எங்களுடைய ஆத்மா வழி நடத்தும் விஜய் அண்ணா!

என அந்த போஸ்டரில் வாசகம் அடித்து ஒட்டப்பட்டுள்ளது.இந்த கண்ணீர் அஞ்சலி போஸ்டர்கள் திருச்சியில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது.



## வண்டி பெரியாரில் தோட்டத் தொழிலாளர்கள் வளர்ச்சித் திட்டங்கள் நடைமுறைப்படுத்த விசிக சார்பில் ஒருநாள் உண்ணாவிரதப் போராட்டம்

இடுக்கி, ஆக்.28-

இடுக்கி மாவட்டம் வண்டிப்பெரியாரில் விடுதலைச் சிறுத்தைகள் கட்சியின் பீர்மேடு சட்டமன்றத் தொகுதி கமிட்டியின் சார்பில் இடுக்கி மாவட்டத்தில் வசித்து வரும் தோட்டத் தொழிலாளர்கள் மற்றும் பொதுமக்களின் பல்வேறு தேவைகள் ஏறத்தாழ 70 ஆண்டுகளாகியும் இன்று வரை வளர்ச்சித் திட்டங்கள் நடைமுறைப்படுத்த வில்லை. இந்த அலட்சிய போக்கை கண்டித்து வண்டிப் பெரியாரில் ஒருநாள் உண்ணாவிரதப் போராட்டம் நடைபெற்றது.

இந்த உண்ணாவிரதப் போராட்டத்தை இடுக்கி மாவட்ட செயலாளர் பெரியார் பாலன் தலைமையில் மேற்கொண்டார்.

இந்நிகழ்வை வண்டிப் பெரியார் பஞ்சாயத்து கமிட்டி செயலாளர் சிவன் வரவேற்புரை ஆற்றினார்.


இடுக்கி மாவட்ட தலைவர் துரை.ஜெயபால். கேரள மாநில செய்தி தொடர்பாளர் ரிஸ்வான் கோயா, இடுக்கி மாவட்ட செய்தி தொடர்பாளர் முல்லை முருகன், தேனி திண்டுக்கல் மண்டல செயலாளர் தமிழ்வாணன். தேனி கிழக்கு மாவட்ட செய்தி தொடர்பாளர் அன்புவடிவேல். வழக்கறிஞர் அணி மாநில துணைச் செயலாளர் சிவனேசன். பீர்மேடு மண்டலத் தலைவர் தீனா. உடும்பன்சோலை ஒன்றிய செயலாளர் ஹரிவளவன். உள்ளிட்ட விடுதலைச் சிறுத்தைகள் பலர் கலந்து கொண்டனர்.

## திருமுருகன்பூண்டி நல்லாறு கழிவுநீர் சுத்திகரிப்புத் தொட்டி கட்டுதல் நீர்வழித் தடம் மறித்துக் கட்டுவதை ஆய்வு செய்தல் உரிய நடவடிக்கை கோரி மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி மனு

### மனுவை பெற்றுக்கொண்ட மாவட்ட ஆட்சியர் நேரில் ஆய்வு செய்வதாக தெரிவித்தார்

கோவை, அக்.28-

கோவை மாவட்டம், அன்னூரில் தொடங்கி, திருப்பூர் மாவட்டம், அவிநாசி ஒன்றியத்திற்குட்பட்ட நரியம்பள்ளியிலிருந்து சுமார் 12 கி.மீ. தூரம் நமது மாவட்டத்திற்குள் பாய்ந்து ஓடி, ஊத்துக்குளியில் நொய்யலாற்றில் கலக்கிறது, நல்லாறு. இதன் வழித்தடத்தில் பல்வேறு குளம், குட்டைகளுக்கு நீராதாரமாகவும் இருந்துள்ளது.




இந்த பரந்துவிரிந்த நல்லாறு, தற்போது புதர்கள் மண்டி, கோழிக் கழிவுகள், குப்பைகள், சாக்கடைக் கழிவுநீர் உள்ளிட்ட பல்வேறு கழிவுகள் கொட்டப்பட்டு, துர்நாற்றம் வீசும் சாக்கடை வடிகாலாக மாற்றப்பட்டுள்ளது.

பல்லாண்டுகளுக்கு முன்பு இதில் ஓடிய தூயநீர், மக்களின் குடிநீருக்கும், விவசாயத்திற்கும், கோவில்களுக்கும் பயன்படுத்தப்பட்டு வந்துள்ளது. தற்போது இந்த நல்லாறு, இதன் கரையில் அமைந்துள்ள சாய, சலவை ஆலைகள், பனியன் கம்பெனிகள், தனியார்களால் ஆக்கிரமிக்கப்பட்டு மிகவும் குறுகியதாக மாற்றப்பட்டுள்ளது.

நீர்வழிப் பாதைகளை மறிக்கவோ, ஆக்கிரமிக்கவோ, அதற்குள் கட்டுமானங்களோ எழுப்பவோ கூடாது என்று உச்சநீதிமன்றத் தீர்ப்பு உள்ளது. இந்நிலையில், நல்லாற்றை தூர்வாரி சுத்தம் செய்து, அதனை பழைய நிலைமைக்கு மீட்டெடுக்க வேண்டும் என்று மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில், கட்சி மாநாடுகளில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள், மனுக்கள் மூலம் தமிழக அரசுக்கும், மாவட்ட நிர்வாகத்துக்கும் பலமுறை வலியுறுத்தப்பட்டது. திருமுருகன் பூண்டி நகராட்சியிலும் தீர்மானம் முன்மொழியப்பட்டது. இந்நிலையில் கடந்த ஓராண்டுக்கு முன்பு, தமிழ்நாடு அரசின் நீர்வளத்துறையில் இருந்து, திட்ட மதிப்பீடு தயாரிக்கப்பட்டு அரசுக்கு கருத்துரு அனுப்பப்பட்டுள்ளது. அரசு நிதி ஒதுக்கியவுடன் நல்லாறு தூர்வாரப்படும் எனக் கடிதம் மூலம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் திருமுருகன்பூண்டி நகராட்சி நிர்வாகம், நகர்மன்றத்தின் அனுமதி பெறாமலேயே சுமார் 15 கோடி மதிப்பீட்டில், நகராட்சி கழிவுநீரை சுத்திரித்து, நல்லாற்றில் விட முடிவுசெய்து, நல்லாற்றின் குறுக்கே இராக்கியாபாளையம், தேவராயம்பாளையம், உமையஞ் செட்டிபாளையம், திருமுருகன்பூண்டி ஆகிய இடங்களில் நல்லாறு செல்லும் நீர்வழிப் பாதையை மறித்து கழிவுநீர்த் தொட்டிகள் கட்டப்பட்டு வருகிறது.

இதனால் மழைக்காலங்களில் வெள்ளப் பெருக்கு ஏற்பட்டால், வெள்ளநீர் குடியிருப்புப் பகுதிக்குள் நுழையும் அபாயம் உள்ளது என அஞ்சுகிறோம்.

மேலும், இத்தகைய கட்டுமானத்தை மேற்கொள்ள திருமுருகன் பூண்டி நகராட்சி நிர்வாகம், பொதுப்பணித் துறை, நீர்வளத் துறை, சுற்றுச் சூழல் துறை என எந்தத் துறையிடமும் உரிய அனுமதி பெறாமல், நல்லாற்றின் நடுவில், மறித்து கட்டுமானங்களை மேற்கொள்வது உச்சநீதிமன்றத் தீர்ப்புக்கு எதிரானது என்பதைக் கவனப்படுத்துகிறோம். மேலும், அவ்வாறு கட்டப்பட்ட கட்டுமான சுவர், கடந்த வாரம் பெய்த மழை வெள்ளத்தில் இடிந்து விழுந்துள்ளது என்பதையும் தெரிவித்துக் கொள்கிறோம்.

எனவே, இயற்கைக்கு விரோதமாக நல்லாற்றின் போக்கை மறித்துக் கட்டப்படும் கழிவுநீர் சுத்திகரிப்புத் தொட்டி குறித்து முழுமையான ஆய்வுகளை மேற்கொண்டும், மக்களின் அச்சத்தைப் போக்கியும் சுற்றுச்சூழலுக்கு அபாயம் விளைவிக்காமலும் எதிர்காலத்தில் நல்ல ஆற்றில் வரும் மழைவெள்ளம் குடியிருப்புக்குள் புகாமலும் உரிய பாதுகாப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ள வேண்டும் என கேட்டுக்கொள்கிறோம் மேலும் முறையான அனுமதி பெறாமலே மக்கள் வரிப்பணத்தை முறைகேடாக பயன்படுத்திட அனுமதி அளித்த அனைவர் மீதும் துறை ரீதியான நடவடிக்கைகள் எடுக்கவும் தங்களை வலியுறுத்துகிறோம் என்று மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் மாவட்ட ஆட்சியரிடம் மனு அளிக்கப்பட்டது .

மேலும் இந்த நிகழ்வில் கட்சியின் மாவட்ட குழு உறுப்பினர் ஆர் பழனிச்சாமி ஒன்றிய குழு உறுப்பினர்கள் எ சண்முகம் ஆர் பாலசுப்பிரமணியம் முன்னாள் கமிட்டி உறுப்பினர் காமராஜ் திருமுருகன் பூண்டி நகர மன்ற உறுப்பினர் பி சுப்பிரமணியம் கிளை செயலாளர் ராசு உள்ளிட்ட கலர் கலந்து கொண்டனர்



## நிலையத்தை அகற்றி பொருட்களை சூறையாடிய உரிமையாளர் மீது நடவடிக்கை எடுக்க வலியுறுத்தி மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் தீக்குளிக்க முயற்சி

திருச்சி, அக்.28-

திருச்சி சத்திரம் பேருந்து நிலையம் பகுதியில் உள்ள ஒரு காம்ப்ளக்ஸில் அகல்கி என்ற அழகு நிலையம் செயல்பட்டு வருகிறது. அழகு நிலையத்தின் உரிமையாளர் தேவி முன் தொகை 2 லட்சம் ரூபாய் கொடுத்து 12 வருடங்களாக இங்கு மாதம் வாடகை கொடுத்து அழகு நிலையத்தை நடத்தி வருகின்றனர். இந்நிலையில் இந்த கட்டிடத்தை மேம்படுத்துவதாக கூறி கட்டிடத்தின் உரிமையாளர் சில நாட்கள் நேரம் கேட்டு உள்ளார். அதுவரை அங்கு எந்த பணியும் நடைபெற வேண்டாம் என அறிவுறுத்தி உள்ளார். ஆனால் தற்போது வரை அவர் மேம்படுத்தி கொடுக்கவில்லை. அதற்கு மாறாக மாதம் வாடகை கொடுக்கப்பட்டு, குத்தகை காலம் 2028 வரை இருக்கும் நிலையில் கடையை காலி செய்வதற்கு வற்புறுத்துவதோடு அந்த கடையை இடித்து முற்றிலுமாக அகற்றி உள்ளனர். மேலும் குத்தகை பணத்தை திரும்ப தர மாட்டோம் என்பதுடன், எந்த முன் அறிவிப்பும் இன்றி கடையின் உள்ளே உள்ள பொருட்களையும், பணத்தையும் அள்ளிச்சென்று இருக்கின்றனர். இது குறித்து அழகு நிலையத்தில் உரிமையாளர் தேவி முதல்வர் தனி பிரிவு, கோட்டை காவல் நிலையத்தில் புகார் அளித்துள்ளார். ஆனால் எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை. சேதப்படுத்திய பொருட்களுக்கு இழப்பீடு வழங்க வேண்டும் என கூறி திருச்சி மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் தீக்குளிக்க முயன்றதால் பரபரப்பு ஏற்பட்டது.



■ தேனி மாவட்டம் கம்பம் 11வது வார்டில் வார்டு சிறப்பு முகாம் நகர்மன்ற உறுப்பினர் கம்பம் சாதிக் தலைமையில் கம்பம் நகராட்சி அதிகாரிகள் ராஜ்குமார்,சுரேஷ் அவர்களின் முன்னிலையில் நடைபெற்றது. இதில் மனிதநேய மக்கள் கட்சி மாவட்ட செயலாளர் பி.அப்பாஸ் மந்திரி, நகர மனிதநேய மக்கள் கட்சி செயலாளர் ஷி.அப்பாஸ் மந்திரி கலந்து கொண்டனர். சிறப்பு அழைப்பாளர்களாக வின்னர் ஸ்போர்ட்ஸ் அலீம் அண்ணன், வார்டு பிரதிநிதிகள் கலந்து கொண்டனர். தேனி மாவட்டத்தில் வார்டு சிறப்பு முகாம் 3 நாட்கள் நடைபெறுகின்றது இம்முகாமில் பொதுமக்கள் அதிக அளவில் கலந்து கொண்டு கோரிக்கை மனுக்களை அளித்தனர்.

## மழைநீர் தேங்கும் இடங்களில் நீரை வெளியேற்ற 2,000க்கும் மேற்பட்ட மோட்டார் பம்புகள் தயார்: சென்னை மாநகராட்சி

சென்னை, அக்.28-

மழைநீர் தேங்கும் இடங்களில் நீரை வெளியேற்ற 2,000க்கும் மேற்பட்ட மோட்டார் பம்புகள் தயார் நிலையில் உள்ளதாக சென்னை மாநகராட்சி தெரிவித்துள்ளது. முறிந்து விழும் மரங்களை அகற்ற 457 அறுவை



இயந்திரங்கள் தயார். 22 சுரங்கப்பாதைகளில் மழைநீர் தேங்காமல் பராமரிக்கப் பட்டுவருவதாக சென்னை மாநகராட்சி தகவல் தெரிவித்துள்ளது.

## சுரண்டை நகராட்சி மக்களின் சுமார் 35 வருட கோரிக்கை முதல்வரின் கவனத்தை பெறுமா? மக்கள் எதிர்பார்ப்பு

சுரண்டை, அக்.28-

தென்காசி மாவட்டத்திற்கு தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் வருகை தரும் நிலையில் முதல்வரின் கவனத்தை சுரண்டை பெறுமா? என்ற எதிர்பார்ப்பு சுரண்டை பகுதி மக்களின் மத்தியில் எழுந்துள்ளது.

தென்காசி மாவட்டத்தில் மிக வேகமாக வளர்ந்து வரும் வணிக நகரங்களுள் சுரண்டை நகராட்சி ஒன்றாகும். இப்பகுதி மக்கள் உழைப்பிற்கு பெயர் பெற்றவர்கள் மேலும் சுரண்டையை சுற்றியுள்ள சுமார் 40 ஊராட்சி 4 பேரூராட்சி பகுதியை சேர்ந்த 200க்கும் அதிகமான கிராமங்களை சேர்ந்த பொதுமக்கள் விவசாயிகள் மாணவர்கள் சுரண்டையை சார்ந்தே வாழ்ந்து வருகின்றனர்.

தென்காசி தெற்கு மாவட்ட திமுக செயலாளர் ஜெயபாலன், தென்காசி எம்எல்ஏ எஸ் பழனி நாடார் ஆகியோரின் சொந்த ஊர், முதலமைச்சர் முக ஸ்டாலினின் மிகவும் நம்பிக்கைக்குரிய கலை கதிரவனின் சொந்த ஊருக்கு அருகில் உள்ள நகரம் என பல பெருமையை பெற்றதாகும். தென்காசி சட்ட மன்றம் மற்றும் நாடாளுமன்ற வேட்பாளர்களின் வெற்றி தோல்வியை நிர்ணயிக்கும் நகரமாக விளங்குகிறது.

குறிப்பாக இப்பகுதி மக்களின் போக்குவரத்து வசதியில் தன்னிறைவு பெற்றிட அரசு பஸ் டெப்போ அமைக்க கோரி சுமார் 35 வருடங்களாக கோரிக்கை விடுத்து வந்தும் அதற்கான அனைத்து சாத்தியக்கூறுகள் இருந்தும் இதுவரை நிறைவேற்றப்படவில்லை.

மிக முக்கியமான நகரமாக இருந்தும் இங்கு ஒரே ஒரு மருத்துவரை மட்டுமே கொண்டு இயங்கும் அரசு ஆரம்ப சுகாதார நிலையம் மட்டுமே செயல்படுகிறது. அதனை 50 படுக்கை வசதியுடன் கூடிய அரசு மருத்துவமனையாக தரம் உயர்த்த வலியுறுத்தியும் கடந்த 29102010 திமுக ஆட்சிக்காலத்தில் அடிக்கல் நாட்டப்பட்டும் இதுவரை எந்த பணியும் துவங்கவில்லை

காமராஜர் ஆட்சி காலத்தில் திட்டமிடப்பட்ட இரட்டை குளம் ஊத்துமலை கால்வாய் திட்டத்திற்கு இதுவரை பலமுறை ஆய்வு பணிகள் செய்தும் இன்னும் அத்திட்டம் கனவாகவே உள்ளது. சுரண்டை, வீரகேரளம்புதூர், சாம்பவர் வடகரை, ஊத்துமலை, சேர்ந்தமரம் ஆகிய காவல் நிலையங்களை உள்ளடக்கி காவல் துணை கண்காணிப்பாளர் அலுவலகம் அமைக்க கோரிக்கை விடுத்தும் நிறைவேற்றப்படவில்லை

திருமங்கலம் கொல்லம் தேசிய நெடுஞ் சாலையையும், தென்காசி , திருநெல்வேலி தேசிய நெடுஞ்சாலையையும் இணைக்கும் வகையில் ராஜபாளையத்தில் இருந்து சங்கரன்கோவில், வீரசிகாமணி, சுரண்டை வழியாக அத்தியூத்து வரை உள்ள சாலைகளை நான்கு வழிச் சாலையாக தரம் உயர்த்த வேண்டும்.

வீரகேரளம்புதூர் தாலுகா பகுதிக்கென சார்பு நீதிமன்றங்கள் அமைக்க வேண்டும்

சுரண்டை பகுதிக்கென மோட்டார் ஆய்வாளர் அலுவலகம் அமைக்க வேண்டும்.

சுரண்டையில் மின் வாரிய செயற்பொறியாளர் அலுவலகம் அமைக்க வேண்டும்

என்பது உள்ளிட்ட பல்வேறு வசதிகளை ஏற்படுத்த சுரண்டை நகராட்சி முதலமைச்சரின் கவனத்தை பெற வேண்டும் என இப் பகுதி மக்கள் எதிர்பார்க்கின்றனர் கடந்த திமுக ஆட்சியில் தென் தமிழகத்தின் பெரிய கல்லூரியாக சுரண்டை காமராஜர் அரசு கல்லூரி மற்றும் தற்போது சுரண்டையை நகராட்சியாக தரம் உயர்த்திய முதலமைச்சர் முக ஸ்டாலின் கவனத்தில் கொள்வாரா.



# தொடர் கனமழையால் பாலாற்றில் வெள்ளப் பெருக்கு பொதுமக்களுக்கு எச்சரிக்கை

வேலூர், அக்.28-

தொடர் மழை காரணமாக வேலூர் விரிஞ்சிபுரம் பாலாற்றில் நீர்வரத்து அதிகரித்துள்ளது. ஆர்ப்பரித்துச் செல்லும் வெள்ளத்தை பொதுமக்கள் தரைப்பாலத்தில் நின்றபடி கண்டு ரசித்து வருகின்றனர்.

வடகிழக்கு பருவமழை காரணமாக தமிழகத்தின் பல்வேறு மாவட்டங்களில் பரவலாக மழை பெய்து வரு கிறது. இதனால் வேலூர், ராணிப்பேட்டை, திருப்பத்தூர் மாவட் டங்களில் ஆறு, ஏரி, குளம், குட்டை உள்ளிட்ட நீர்நிலைகளுக்கு நீர்வரத்து அதிகரித்துள்ளது.

தமிழகஆந்திர மாநில பாலாற்றுப் பகுதிகள், வேலூர், திருப்பத்தூர் மாவட்டத்தில் பெய்த தொடர் மழையால் பாலாற்றின் துணை ஆறுகளில் நீர்வரத்து அதிகரித்தது. இதனால் பாலாற்றிலும் அதிகளவில் தண்ணீர் ஓடுகிறது.

அதன்படி, வேலூர் மாவட்டம் விரிஞ்சிபுரம் பாலாற்றில் தண்ணீர் ஆர்ப்பரித்துச் செல் வதை விரிஞ்சிபுரம் தரைப்பாலம் வழியாகச் செல்லும் வாகன ஓட்டிகள், பொதுமக்கள் சிறிதுநேரம் நின்று சீறிப்பாய்ந்து செல்லும் ஆற்று வெள்ளத்தை பார்த்து ரசித்து வருகின்றனர்.

பலர் தங்கள் கைப்பேசியில் பாலாற்றில் வெள்ளம் செல் வதை புகைப்படம் எடுத்து அதை நண்பர்களுக்கும், உற வினர்களுக்கும் அனுப்பி மகிழ்ந்தனர்.

வேலூர் மாவட்டத்தில் பெய்து வரும் தொடர் மழை காரணமாக நீர்நிலைகளுக்கு தண்ணீர் வரத்து அதிகரித்து வருவதால் பொதுமக்கள் பாதுகாப்பாக இருக்க வேண்டும் என்றும், ஆறு, ஏரி, குளம், குட்டைகளில் பொதுமக்கள் குளிக்கவோ, துணிகளை துவைக்கவோ, மீன் பிடிக்கவோ செல்ல வேண்டாம், ஆற்றில் தண்ணீர் குறைவாக வருகிறது என கடந்து செல்ல வேண்டாம் என மாவட்ட நிர்வாகம் சார்பில் எச்சரிக்கை விடுக்கப் பட்டுள்ளது.

# கடலூர் துறைமுகத்தில் வரத்து குறைவால் மீன்கள் விலை உயர்வு

கடலூர், அக்.28-

கடலூர் துறைமுகத்தில் நேற்று வரத்து குறைவு காரணமாக மீன்களின் விலை உயர்ந்து காணப்பட்டது. ஒரு கிலோ வஞ்சிரம் ரூ.1200க்கு விற்பனை செய்யப்பட்டது.

கடலூர் துறைமுகத்தில் இருந்து ஏராளமான மீனவர்கள் தினந்தோறும் விசை மற்றும் பைபர் படகுகளில் மீன் பிடிக்க சென்று வருகின்றனர். கடலூர் துறைமுகத்தில் அதிகாலை முதல் மீன் விற்பனை தொடங்கி விறுவிறுப்பாக நடைபெறும். இதனை உள்ளூர் மற்றும் வெளியூர் வியாபாரிகள் மட்டுமின்றி பொதுமக்களும் போட்டி போட்டு வாங்கி சென்று வருகின்றனர்.



இந்நிலையில், வங்க கடலில் உருவாகியுள்ள காற்றழுத்த தாழ்வு நிலை காரணமாக கடலூர் துறைமுகத்தில் 1ம் எண் புயல் எச்சரிக்கை கூண்டு ஏற்றப்பட்டுள்ளது. இதற்கிடையே, கனமழை மற்றும் கடலில் சூறைக் காற்று வீசும் என்ற எச்சரி க்கை காரணமாக கடலூர் மாவட்டத்தில் கடந்த 19ம் தேதி முதல் விசைப்படகு மீனவர்கள் மீன்பிடிக்க கடலுக்கு செல்லவில்லை.

இந்நிலையில் ஞா யிற்றுக்கிழமையான நேற்று கடலூர் மீன்பிடி துறைமுகத்தில் கரைப்பகுதியில் பிடித்து வரப்பட்ட மீன்கள் மட்டும் விற்பனைக்கு கொண்டு வரப்பட்டது. வரத்து குறைவு காரணமாக மீன்களின் விலை உயர்ந்தது.

ஒரு கிலோ வஞ் சிரம் ரூ.1200க்கும், சங்கரா ரூ.500க்கும், சுறா ரூ.500க்கும், சீலா ரூ.450க்கும், பாறை ரூ.350க்கும், இறால் ரூ.300 முதல் ரூ.400 வரைக்கும், வவ்வால் ரூ.750க்கும், நெத் திலி ரூ.200க்கும் விற்பனை செய்யப்பட்டது. மீன்கள் வாங்க பொதுமக்களின் கூட்டம் குறைவாக காணப்பட்டது.

# சூரசம்ஹாரத்தை முன்னிட்டு பழநி முருகன் கோயிலில் 'தண்டு விரதம்' இருந்து பக்தர்கள் வழிபாடு



பழநி, அக்.28-

பழநி முருகன் கோயிலில் கந்தசஷ்டி திருவிழாவின் முக்கிய நிகழ்வாக திங்கட்கிழமை (அக்.27) மாலை சூரசம்ஹாரம் நடைபெற உள்ளது. இதையொட்டி, ஏராளமான பக்தர்கள் 'தண்டு விரதம்' இருந்து வழிபாடு நடத்தினர்.

அறுபடை வீடுகளில் 3ம் படை வீடான பழநி தண்டாயுதபாணி சுவாமி கோயிலில் கந்தசஷ்டி திருவிழா அக்.22ம் தேதி காப்பு கட்டுதலுடன் தொடங்கியது. மலைக் கோயிலில் மூலவர், உற்சவ ருக்கு காப்பு கட்டப்பட்டதை தொடர்ந்து விநாயகர், துவாரபாலகர்கள், நவ வீரர்களுக்கு காப்பு கட்டப்பட்டது. கந்தசஷ்டி விழாவை முன்னிட்டு தினமும் காலை, மாலை யில் சுவாமி புறப்பாடு நடைபெற்றது.

விழாவின் முக்கிய நிகழ்ச்சியான சூரசம்ஹாரம் திங்கட்கிழமை (அக்.27) மாலை கிரிவீதிகளில் நடைபெற உள்ளது. இதையொட்டி, இன்று (அக்.27) அதிகாலை 4 மணிக்கு நடை திறக்கப்பட்டு விஸ்வரூப தரிசனம், காலை 4.30 மணிக்கு விளா பூஜை மற்றும் படையல் நைவேத்தியம் நடைபெற்றது. சூரசம் ஹாரத்தை யொட்டி, காலை 11 மணி வரை மட்டுமே மலைக்கோயிலுக்கு அனுமதிக்கப்பட்டனர். கந்த சஷ்டியை முன்னிட்டு விரதமிருந்த பக்தர்கள் இன்று காலை முதலே திருஆவினன்குடி கோயிலில் 'தண்டு விரதம்' இருந்து வழிபாடு செய்தனர்.

அதாவது, வாழைத் தண்டு, இஞ்சி, ஆப்பிள், ஆரஞ்சு, திராட்சை உள்ளிட்ட பழ வகைகள், தயிர் ஆகியவற்றை கொண்டு பிரசாதம் தயார் செய்து சுவாமிக்கு படைத்து விரதத்தை நிறைவு செய்தனர். சூரசம் ஹாரத்தை முன்னிட்டு, வெளி மாவட்டங்களில் இருந்து பக்தர்கள் வந்த வண்ணம் உள்ளனர்.

பழநி மலைக்கோ யிலில் மாலை 3 மணிக்கு மலைக்கொழுந்து அம்மனிடம் சூரனை வதம் செய்ய சின்னக்குமார சுவாமி வேல் வாங்கும் நிகழ்ச்சி நடைபெற உள்ளது. இதையடுத்து, அனைத்து சந்நிதிகளும் அடைக்கப்படும்.

பராசக்திவேலை திருஆவினன்குடி முருகன் கோயிலுக்கு சென்று பூஜை செய்த பின், மாலை 6 மணிக்கு மேல் வடக்கு கிரிவீதியில் தாரகாசூரன், கிழக்கு கிரிவீதியில் பானுகோபன் சூரன், தெற்கு கிரிவீதியில் சிங்கமுகாசூரன், மேற்கு கிரிவீதியில் சூரபத்மன் ஆகியோரை சின்னக்குமார சுவாமி வதம் செய்ய உள்ளார்.

சூரசம்ஹாரம் முடிந்ததும் இரவு 9 மணிக்கு மேல் ஆரியர் மண்டபத்தில் வெற்றி விழாவும், மலைக்கோயிலுக்கு சென்ற பின் சம்ப்ரோட்சனம் மற்றும் அர்த்தஜாம பூஜையும் நடைபெற்றது. நாளை (அக்.28) காலை 10 மணிக்கு மேல் மலைக்கோயிலில் வள்ளி, தேவசேனா சமேத சண்முகருக்கும், பெரியநாயகியம்மன் கோயிலில் இரவு 7 மணிக்கு மேல் வள்ளி, தேவசேனா முத்துக்குமாரசுவாமிக்கும் திருக்கல்யாணம் நடைபெற உள்ளது.



## பாஜக கூட்டணி ஆட்சிக்கு வந்ததும் கோரிக்கைகளுக்கு தீர்வு நயினார் நாகேந்திரன் உறுதி

சென்னை, அக்.28-

பாஜக சார்பில் 'தமிழகம் தலைநிமிர தமிழனின் பயணம்' என்ற பிரச்சார பயணத்தை மேற்கொண்டுள்ள அக்கட்சியின் மாநிலத் தலைவர் நயினார் நாகேந்திரன் பெரம்பலூர் மாவட்டம் வேப்பந்தட்டை வட்டம் வாலிகண்டபுரம் ஊராட்சியில் நேற்று முன்தினம் மக்கள் குறைதீர் கூட்டம் நடத்தினார்.

இதில், பொதுமக்கள் பலர் கலந்துகொண்டு தங்களின் குறைகளை தெரிவித்தனர். மேலும், விசுவக்குடி அணை வாய்க்காலை சீரமைக்க வேண்டும். தண்ணீர் வரத்து வாய்க்காலை அகலப்படுத்த வேண்டும். செந்துறையை பேரூராட்சியாக தரம் உயர்த்த வேண்டும். வேப்பந்தட்டை வட்டம் எளையூர் கிராமத்தில் பொருளாதார சிறப்பு மண்டலம் அமைக்க வேண்டும். நரிக்குறவர்களுக்கு வழங்க வேண்டிய பட்டா நிலங்களை அளவீடு செய்து வழங்க வேண்டும் என பல்வேறு கோரிக்கைகள் அடங்கிய மனுக்களை பொதுமக்கள் அளித்தனர்.

அந்த மனுக்களை வாங்கிய நயினார் நாகேந்திரன், "2026 சட்டப்பேரவைத் தேர்தலில் வெற்றி பெற்று மாநிலத்தில் பாஜக கூட்டணி ஆட்சிக்கு வரும். அப்போது, உங்களின் கோரிக்கைகள் அனைத்து நிறைவேற்றப்படும்" என்று உறுதியளித்துவிட்டு, அங்கிருந்து புறப்பட்டுச் சென்றார். இதையடுத்து, "மனு அளித்தால் உடனடியாக நடவடிக்கை எடுப்பார் என எதிர்பார்த்தால், ஆட்சி மாற்றம் வந்த பின்னர் நடவடிக்கை எடுக்கப்படும் என்று கூறுகிறாரே?" என கூறியபடி மக்கள் கலைந்துசென்றனர்



# கடலாடியில் தேவர் குருபூஜையில் பெண்கள் முளைப்பாரி ஊர்வலம்

சாயல்குடி, அக்.28-

கடலாடியில் தேவர் குருபூஜை மற்றும் முளைப் பாரி திருவிழாவையொட்டி 10 நாள் திருவிழா நடந்தது. கடலாடி தேவர் மகாசபையின் சார்பில் ராஜராஜேஸ்வரி அம்மன் 8 ஆண்டு வருடாபிஷேகம் மற்றும் பசும்பொன் முத்துராமலிங்கத் தேவரின் 118ம் ஆண்டு ஜெயந்தி, 63வது குருபூஜை மற்றும் 37ம் ஆண்டு முளைப்பாரி திருவிழா நடந்தது.

நிகழ்ச்சிகளுக்கு தேவர் மகாசபை தலைவர் ஜெகநாதன் தலைமையும், செயலாளர் சுபாஷ் சந்திரபோஸ், பொருளாளர் செல்லப்பாண்டியன் முன்னிலையும் வகித்தனர்.

கடந்த வாரம் சனிக்கிழமை காப்பு கட்டுதலுடன் திருவிழா தொடங்கியது. புதன்கிழமை கணபதி ஹோமம் மற்றும் யாகச்சாலைகள் வளர்க்கப்பட்டு ராஜேஸ்வரி அம்மன், விநாயகர், முருகன், தேவர் சிலைகளுக்கு புனித நீர் ஊற்றி,சிறப்பு அலங்காரத்துடன் தீபாராதனை நடந்தது.

திருவிழாவையொட்டி தினந்தோறும் இரவில் பெண்கள் கும்பி அடித்தும், இளைஞர்கள் ஒயிலாட்டம், சிறுமிகள் கோலாட்டம் ஆடியும் உற்சாகமாக கொண்டாடினர்.

மாவிளக்கு, பால்குடம், அக்னிச்சட்டி, ஆயிரம் கண் பானை, வேல் எடுத்தும், முடிகாணிக்கை நேர்த் திக்கடன் செலுத்தினர். மழை பெய்து விவசாயம் செழிக்க வேண்டி 1008 திருவிளக்கு பூஜை நடத்தப்பட்டது.

கடைசி நாளான நேற்று கட்டுரை போட்டி, பேச்சுப் போட்டி உள்ளிட்ட பல்வேறு போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவ,மாணவிகளுக்கு பரிசுகள் வழங்கப்பட்டது. மாலையில் பெண்கள் முளைப் பாரியை எடுத்து கடலாடியின் முக்கிய வீதிகளில் ஊர்வலமாக வந்து குளத்தில் கரைத்தனர்.

நிகழ்ச்சியில் பொது மக்களுக்கு அன்ன தானம் வழங்கப் பட்டது. திருவி ழாவில் ஏராளமானோர் கலந்து கொண்டனர். ஏற்பாடுகளை கடலாடி தேவர்மகாசபை மற்றும் இளைஞரணியினர் செய்திருந்தனர்.

# தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர் ஆணைய உறுப்பினர்கள் தேர்வு: அன்புமணி முன்வைக்கும் கோரிக்கை

சென்னை, அக்.28-

தற்போதைய தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர் ஆணையத்தின் பதவிக்காலம் வரும் நவம்பர் 16 உடன் முடிவடையும் நிலையில், அனைத்துக் கட்சித் தலைவர்கள் கூட்டத்தைக் கூட்டி, விவாதித்து தான் புதிய ஆணையத்தை அமைக்க வேண்டும் என பாமக தலைவர் அன்புமணி ராமதாஸ் தெரிவித்துள்ளார்.


இது குறித்து அவர் வெளி யிட்டுள்ள அறிக்கையில், "தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர் ஆணையத்தின் பதவிக்காலம் நவம்பர் 16 ஆம் தேதியுடன் நிறைவடைகிறது. சமூகநீதியை பாதுகாப்பதற்காக உருவா க்கப்பட்ட ஆணையம், சமூகநீதியை படுகொலை செய்யும் அரசின் சதிகளுக்கு துணை போனதையும், கொடுக்கப்பட்ட கடமைகளில் ஒன்றைக் கூட நிறைவேற்றாததும் அதன் தோல்வியை மட்டுமின்றி துரோகத்தன்மையையும் காட்டுகிறது. இத்தகைய தன்மை கொண்ட சமூகநீதியின் எதிரிகளுக்கு புதிதாக அமைக்கப்படவுள்ள ஆணையத்தில் கண்டிப்பாக இடமளிக்கக்கூடாது.

மண்டல் ஆணையப் பரிந்துரையின் அடிப்ப டையில் மத்திய அரசு வேலைவாய்ப்புகளில் பிற பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்கு 27% இட ஒதுக்கீடு வழங்கப்பட்ட வழக்கில் உச்ச நீதிமன்றம் அளித்தத் தீர்ப்பின் அடிப்படையில், அரசியலமைப்புச் சட்டப்பி ரிவுகள் 16(4), 340 ஆகியவற்றின்படி, 1993 ம் ஆண்டு முதல் தேசிய அளவிலும், மாநில அளவிலும் பிற்படுத்தப்பட்டோர் ஆணையங்கள் அமைக்கப்பட்டு வருகின்றன. பிற்படுத்தப்பட்ட வகுப்பினரின் சமூகநீதித் தேவைகளை நிறைவேற்றுவது தான் இந்த ஆணையங்களின் கடமையாகும்.

தமிழ்நாட்டில் நீதியரசர் தணிகாசலம் தலைமையிலான ஆணையம் பதவி விலகிய தையடுத்து, ஓய்வுபெற்ற சென்னை உயர் நீதிமன்ற நீதிபதி வீ.பாரதிதாசன் தலை மையில் புதிய ஆணையம் 17.11.2022 ஆம் நாள் அமைக்கப்பட்டது.

ஆணையத்திற்கு ஓய்வு பெற்ற ஐஏஎஸ் அதிகாரிகள் நால்வர் உள்ளிட்ட 6 உறுப்பினர்கள் நியமிக்கப்பட்டனர். இந்த ஆணையத்திற்கு மொத்தம் 6 பணி வரம்புகளும், ஒரு கூடுதல் பணி வரம்பும் வழங்கப்பட்டன. ஆனால், கடந்த 3 ஆண்டுகளில் இந்த ஆணையம் ஆக்கப்பூர்வமாக எதையும் செய்யவில்லை.

பிற்படுத்தப்பட்ட வகுப்பினர்/மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் பட்டியலில் புதிய சாதிகளை சேர்த்தல் அல்லது நீக்குதல், இந்த பட்டியல்களை மாற்றியமைத்தல் ஆகியவை ஆணையத்தின் முதல் இரு பணிகள் ஆகும். பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் பட்டியலில் உள்ள ஒரு சாதிப் பிரிவை இரண்டாக பிரித்ததைத் தவிர ஆணையம் எதையும் செய்யவில்லை.



சமூக, கல்வி பின்தங்கிய நிலையின் அடிப்படையில் இஸ்லாமியர்கள், கிறித்தவர்கள் உள்ளிட்ட சிறுபான்மை யினரின் இட ஒதுக்கீட்டை மேம்படுத்துதல் என்ற மூன்றாம் கடமையை நிறைவேற்றவும் ஆணையம் முயற்சி கூட செய்யவில்லை.

இவை அனைத்தையும் விட வன்னியர்களின் சமூக, கல்வி நிலை குறித்த தரவுகளைத் திரட்டி அவர்களுக்கு உள் இட ஒதுக்கீடு வழங்கலாம் என்று உச்ச நீதிமன்றம் தீர்ப்பளித்திருந்த நிலையில், அதனடிப்படையில் அவர்களுக்கு உள் ஒதுக்கீடு வழங்குவது பற்றி பரிந்து ரைக்கும்படி வழங்கப்பட்ட கூடுதல் பணிவரம்பை நிறைவேற்றுவதில் பிற்படுத்தப்பட்டோர் ஆணையம் காட்டிய அலட்சியமும், செய்த துரோகமும் எத்தனை நூற்றாண்டுகள் ஆனாலும் மன்னிக்கக்கூடாதவை.

உச்ச நீதிமன்றத் தீர்ப்பு வெளியாகி 10 மாதங்கள் கழித்து 12.01.2023 ஆம் நாள் தான் வன்னியர்களுக்கு உள் இடஒதுக்கீடு வழங்குவது பற்றி 3 மாதங்களில் பரிந்துரை அளிக்கும்படி தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர் ஆணையத்திற்கு தமிழக அரசு ஆணையிட்டது.

ஆணையம் நினைத் திருந்தால், அரசால் வழங்கப்பட்ட 3 மாத காலக்கெடுவுக்குள் தரவுகளைத் திரட்டி, வன்னியர்களுக்கான இட ஒதுக்கீடு குறித்து பரிந்துரைத்திருக்க முடியும். ஆனால், அதன்பின் 1020 நாள்களாகியும் இன்று வரை ஆணையம் துரும்பைக் கூட அசைக்கவில்லை.

வன்னிய மக்களின் சமூக பின்தங்கிய நிலை குறித்த தரவுகளைத் திரட்ட தங்களிடம் கட்டமைப்பு இல்லை என்று கூறி, அந்தப் பொறுப்பை அரசிடமே ஒப்படைத்த ஆணையம், சாதிவாரி மக்கள்தொகை விவரங்கள் இல்லை என்றும், அவற்றை சேகரிக்க அவகாசம் வேண்டும் என்று கோரி ஆறாவது முறையாக காலநீட்டிப்பு பெற்றுள்ளது. ஆனால், சாதிவாரி கணக்கெடுப்பு நடத்த எந்த முயற்சியும் மேற்கொள்ளவில்லை.

உண்மையில், தமிழ்நாடு அரசு அளித்துள்ள ஐந்தாவது பணிவரம்பின்படி, பிற்படுத்தப்பட்ட, மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் மற்றும் சீர்மரபினரின் கோரிக்கைகள் குறித்து ஆய்வு செய்து பரிந்துரைப்பதற்கு தேவையான பொருத்தமான, நிகழ்கால தரவுகளைத் திரட்டுவதற்காக சுதந்திரமான கணக்கெடுப்புகளை தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர் ஆணையம் மேற்கொள்ள முடியும். அதை செய்திருந்தால் வன்னியர்களுக்கு எப்போதோ இட ஒதுக்கீடு கிடைத்திருக்கும். ஆனால், அந்தக் கடமையை ஆணையம் செய்யவில்லை.

உச்ச நீதிமன்றத் தீர்ப்புகள், அரசியலமைப்புச் சட்டப் பிரிவுகள் ஆகியவற்றின் அடிப்படையில் பிற்படுத்தப் பட்ட, மிகவும் பிற்படுத்தப்பட்ட சமூகங்களுக்கு உள் இட ஒதுக்கீடு குறித்து பரிந்துரைப்பது தான் இந்த ஆணையத்தின் நான்காம் கடமையாகும். அதை நிறைவேற்றுவதிலும் ஆணையம் தோல்வியடைந்துவிட்டது. இதன்மூலம் தங்களுக்கு உள் ஒதுக்கீடு வழங்க வேண்டும் என்று கோரிக்கை விடுத்திருந்த 15-க்கும் மேற்பட்ட சமூகங்களுக்கு பிற்படுத்தப்பட்டோர் ஆணையம் மன்னிக்க முடியாத துரோகத்தை செய்திருக்கிறது.

தமிழ்நாடு பிற்படுத்தப் பட்டோர் ஆணையத்தின் கடந்த மூன்றாண்டு கால செயல்பாடுகளை ஆய்வு செய்தால், சொல்லிக்கொள்ளும்படியாக எதையும் செய்யவில்லை. இன்னும் கேட்டால் ஆணையம் செயல்படவே இல்லை. ஏ.என்.சட்டநாதன், ஜே.ஏ.அம்பாசங்கர், கே.எம். நடராஜன், எம்.எஸ். ஜனார்த்தனம் போன்றவர்கள் தலைவர்களாக இருந்த போது தலைநிமிர்ந்து நின்ற தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர் ஆணையம், இப்போது சமூகநீதியை பலி கொடுத்து விட்டு தலைகுனித்து நிற்கிறது.

கடந்த காலங்களில் ஆணையத்தின் தலைவர்களாக இருந்தவர்கள் சமூகநீதியைக் காக்க வேண்டும் என்பதற்காக சொந்த வாழ்க்கையை தியாகம் செய்து, ஆணையத்தின் பணியில் தங்களை அர்ப்பணித்துக் கொண்டார்கள். ஆனால், ஆணையத்தின் இப்போதைய தலைமை, இந்தப் பணியை பகுதி நேர பொழுதுபோக்காகவே கருதுகிறது. சமூகநீதி தேவைப்படும் மக்களை திருப்திபடுத்துவதற்கு பதிலாக ஆட்சியாளர்களை மகிழ்ச்சிப்படுத்துவதையே ஆணையம் செய்தது.

தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர் ஆணையம் இந்திய அரசியலமைப்புச் சட்டப்படி அமைக்கப்பட்ட ஆணையம் ஆகும். சுதந்திரமாக சமூகநீதிக் கடமையாற்றும் அதிகாரம் அதற்கு உண்டு. ஆனால், அந்த அதிகாரத்தை பயன்படுத்தாத ஆணையத்தின் தலைமை, வன்னியர்கள் உள்ளிட்ட சமூகங்களுக்கு எதிராக ஆட்சியாளர்கள் சமூக அநீதி சதிவலை பின்னுவதற்கான ஊசியாகவே பயன்பட்டது.

இந்தத் தலைமையோ, உறுப்பினர்களோ இருந்தால் தமிழ்நாட்டில் சமூகநீதி மீண்டும் மீண்டும் சிலுவையில் அறையப்படுமே தவிர, எந்த சமூகத்திற்கும் சமூகநீதி கிடைக்காது. மிகவும் வருத்தத்துடனும், வேதனையுடனும் இந்த குற்றச்சாட்டை பதிவு செய்கிறேன்.

தற்போதைய தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர் ஆணையத்தின் பதவிக்காலம் வரும் நவம்பர் 16 ஆம் தேதியுடன் முடிவடையும் நிலையில், புதிய ஆணையத்தை அமைக்கும் போது, அதில், கடந்த மூன்று ஆண்டுகளாக சமூகநீதியை படுகொலை செய்வதர்களுக்கு இடமளிக்கக்கூடாது. மாறாக, அனைத்துக்கட்சித் தலைவர்கள் கூட்டத்தைக் கூட்டி, விவாதித்து தான் புதிய ஆணையத்தை அமைக்க வேண்டும் என வலியுறுத்துகிறேன். இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

SAKKRA VIYUGAM owned and published by PAL PANDIAN, printed at SHANLAX PRESS 66, VP COMPLEX, TPK MAIN ROAD, VASANTHA NAGAR, MADURAI-625003,
Published at 70/53 A1, THILAGAR NAGAR 1ST STREET, ANUPPARPALAYAM, TIRUPPUR, TAMIL NADU-641652 Editor: PAL PANDIAN Phone : 88705 00000